
தீபம்:பா

# ஆத்மஜோதி

ஒளி : 05

ஆத்மீக மாத சஞ்சிகை

புரட்டாதி : 2005



செல்லப்ப சுவாமிகள்

திருமணப் பட்டுப்புடைவைகள் மற்றும்
புடவைத்தினிசுகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

# ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ்

# KARAN TEXTILES

## *நவநாகரீக புடவைகளின்*

## *சாம்ராஜ்சியம்*



KT



T.P.0212222697

*Palaly Road, Thirunelvely*



பசுவதையை நிறுத்துவோம்
பசுவைக் காப்போம்.



ஒரு பசு 1000 பேருக்கு பால் கொடுக்கும்
ஒரு பசுவைக் கொன்றால் 25 பேர் சாப்பிடுவர்



உ
சிவமயம்
# ஆத்மஜோதி
தாபிதம் : 1948


**ARTHMAJOTHY**
Est. 1948
ISSN 17039185



தீபம் : ஒளி
பார்திப வருடம்
புரட்டாதி
2005

பதிப்பாசிரியர்

நா. முருகையா

தியான
மணிமண்டபம்

**எழுத்தமைப்பும்**
**அச்சுப் பதிப்பும்**
ஜய்ராம் பிறின்ரேஸ்

**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான
மணிமண்டபம்
ஏழாலை.



**தொடர்பு முகவரி**
நா.முருகையா,
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.


## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் வழங்கியது | 02 |
| 2. | ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை | 08 |
| 3. | ஆத்ம பரிபாகம் | 11 |
| 4. | ஆலய வழிபாடு | 13 |
| 5. | சாலச்சிறந்தது | 16 |
| 6. | சரஸ்வதி வழிபாடு அல்லது இறைஞானத்தின் உதயம் | 18 |
| 7. | முத்தையாவுக்கு முத்தான வரவேற்பு | 19 |
| 8. | யோகஸ்தானம் | 27 |
| 9. | புரட்டாதிச்சனி விரதம் | 30 |
| 10. | நயினை உறை நாயகி | 32 |
| 11. | அஷ்டவசுக்கள் | 36 |



| | | |
|---|---|---|
| பிரதி | :- | 30/= |
| வருட சந்தா | :- | 400/= |
| ஆயுள் சந்தா | :- | 3000/= |

# திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் வழங்கியது

ஒருநாள் நாரதர் மனக்கலக்கம் அடைந்து, சனற் குமாரரை அணுகி 'அமைதி அடைவதற்கு வழி யாது? என்று கேட்டார். அதற்குச் சனற் குமாரர் இருளின் எல்லையை, அதாவது இருள் கடந்த நிலையைச் சுட்டிக்காட்டினார். அந்த எல்லைதான் 'ஸ்கந்தர்' என்று சாந்தோக்கிய உபநிஷதம் பேசுகிறது. வேத சிரசுகளான உபநிஷதங்கள் ஸ்கந்தர் என்னும் சொல்லைப் பிரபலமாகப் பிரயோகப்படுத்துகின்றன. இதிலிருந்தே கந்தப் பெருமானைக் கண்டு கொள்ளலாம். ஸ்கந்தம் என்றால் தோள் என்று பொருள் கொண்டு வலிமை மிக்க தோள்களையுடையவன் கந்தப் பெருமான் என்று புலவர் போற்றுவர். (சரவணப் பூம்பொய்கையில்) ஒன்று கூட்டப் பெற்றவர் என்ற காரணம் பற்றியும் கந்தன் என்ற பெயர் வழங்கும். இந்தத் திருப்பெயர் சர்வசக்தி தத்துவத்தைக் குறிக்கும்.

சூடாமணி நிகண்டு கந்தனை 31 பெயர்களால் சுட்டுகிறது. அதில் முதற் பெயர் முருகனாகும்.

**"சொன்னால் பிறப்பொழியும் சூராய கூற்றகலும்**
**என்னாளும் பேரின்பம் எய்துநெஞ்சே — முன்னாள்**
**பொருசூரன் வல்லுடம்பு போழ்த்தஅயி லேந்தும்**
**முருகவேள் என்னும் மொழி"**

என்று அருளிச் செய்வார் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள்.

மூவாப் பெருமையுள்ள தேவாதி தேவனாம் முருகப் பெருமானின் வரலாற்றை விளக்கும் இந்தக் கந்தபுராணம், காஞ்சி கந்தகோட்டப் பெருமான் **'திகட சக்கர'** என்று அடியெடுத்துக் கொடுக்க கச்சியப்ப சிவாசாரியரால் 10345 பாடல்களால் பாடப்பெற்றது. முருகன் புகழ்பரப்பும் அருணகிரிநாதர், பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் ஆகிய அருளாளர்களின் வழிபற்றி வந்தவர்தாம், நம் ஆராதனைக்குரிய அருள்மொழியரசு தெய்வத்திரு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

சுவாமிகள் தாம் நடத்தி வந்த திருப்புகழமிர்தம் என்ற திங்கள் ஏட்டில் ஈஸ்வர வருடம் சித்திரையிலிருந்து விஷு வருடம் பங்குனி முடிய (1937 முதல் 1941 வரை) ஐந்து ஆண்டுகள் இந்தக் கந்த புராணத்தை உரை நடையாக வரைந்துள்ளார்கள். சுவாமிகளின் இளமைக்கால எழுத்து நடையை இதில் கண்டு மகிழலாம்.63 ஆண்டுகளுக்கு முன்பிருந்த நூல்களில் உள்ளவை.

## திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் கந்தபுராணம்

## சம்பவகாண்டம்

காப்பு

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர விண்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

# பார்வதி ஜனனம்

திருக்கைலாயம் என்னுந் திருமலை ஆயிரங்கோடி சந்திரர்கள் ஒருங்கு சேர்ந்து உதயமானால் எவ்வண்ணம் ஒளி செய்யுமோ அவ்வண்ணம் ஒளி செய்து கொண்டு விளங்கும். சிவபெருமான் தன்னையடுத்த அடியார்களது பாசத்தை நீக்கித் தமது திருவருளைத் தருமாறு போல் அவ்வெள்ளியங்குன்றம் தன்னைச் சார்ந்தோருடைய ஒளியை மாற்றித் தனது நல்லொளியை வீசிக்கொண்டிருக்கும். கொன்றை., வில்வம் முதலிய தருக்களின் சோலைகளால் அம்மலை இயற்கையழகுக்கு இருப்பிடமானது. முக்கண்ணும், நாற்புயமும், பொன்மேனியுமுடைய நந்தியெம்பெருமான் பொற்பிரம்பைக் கரத்திலேந்திக் காவல் புரிந்து கொண்டிருப்பர். இந்திரன் முதலிய இமயவர், ஈறில்லாத மாதவமுடைய இருடிகள், சிவனடியார்கள், சிவகணங்கள் முதலியோர் எப்போதும் அம்மகா மலையில் வாழ்ந்து கொண்டிருப்பர். அரம்பையர்களின் ஆடலும், கந்தருவர்களின் பாடலும்,

வீணை முதலிய இனிய வாத்தியங்களும், தேவர்களின் வாழ்த்தும், எக்காலத்தும் அம்மலையில் ஒலித்துக் கொண்டிருக்கும்.

ஊழிக்காலத்தும் அழியாத அவ்வெள்ளியங்கிரியின் மத்தியில் நவமணிகளின் நல்லொளி வீசிக்கொண்டு பொன்னெடுங்கோயில் ஒன்று பொலிவுற்றிருந்தது. அத்திருக்கோயிலின் நடுவில் வனப்புகளுக்கு உறைவிடமாக விளங்கும் மணிமண்டபத்தில் நவமணி இழைத்த அரியணை மேல் அம்பிகையுடன் சிவபெருமான் எழுந்தருளியிருந்தனர். தும்புரு நாரதர், கந்தருவர், செந்திருமுனிவர் முதலியோர் இனிய கானம் புரிந்துகொண்டிருந்தனர்.

அத்தருவாயில் அம்பிகை மனத்தில் ஒன்றை நினைத்துத் துணுக்குற்று விரைந்தெழுந்து, சிவபெருமானைத்தொழுது, "கற்பனைக் கடந்த கண்ணுதலே! சிவ அபராதியாகிய தக்ஷனுடைய மகள் என்னும் பொருள்படும் தாக்ஷாயணி என்ற பெயரை யான் பூண்டிருத்தல் தகுதியன்று. அவனால் வளர்த்த இவ்வுடலையும் அவனுடைய மகளென்னும் பெயரையும் இனி தரித்திரேன்; அவை நீங்குமாறு திருவருள் புரிதல் வேண்டும்" என்று வேண்டினர்.

சிவபெருமான், "ஒப்பற்ற அன்புடைய ஒண்டொடி! உலகத்தில் ஆன்மாக்கள் உய்யும் வண்ணம் இங்ஙனம் நினைத்தனை; உனது எண்ணம் நன்மையுடைத்தே; மலையரசனாகிய இமவான் உன்னை மகளாகப் பெற்று எமக்குத் தருமாறு விழைந்து பெருந்தவம் புரிகின்றனன். அவன் விருப்பம் நிறைவேறுமாறு நீ அவனுக்கு மகளாகச் சென்று வளர்குதி. ஐந்தாவது ஆண்டில் நம்மை நோக்கி நற்றவம் புரிதி; அக்கால் கணங்களோடு நாம் வந்து உன்னை மணங் கொண்டு திருவருள் புரிவோம்; செல்லுதி" என்று அருளிச் செய்தனர். விடையவன் பால் விடை பெற்ற உமாதேவியார் வெள்ளி வெற்பைவிட்டு இமயமலையை எய்தினர்.

கீழ்த்திசைக் கடலும் மேற்றிசைக் கடலும் ஒன்று கூடா வண்ணம் தடை செய்ய நிற்பது போன்று விண்ணளாவிய இமயமலை எழில் செய்து விளங்கும். அம்மலையின் மேல் தேவாமிர்தம் ஒத்த

தெண்ணீருடைய பத்மை என்னும் தடாகமொன்று திகழும். அத்தடாகத்தில் இமவான் கௌரியம்மை தனக்கு மகளாகத் தோன்றவும், அவரை அரனார்க்கு நல்கவும் விழைந்து பெருந்தவமாற்றி நின்றனன்.

எல்லா உலகங்களையும் ஈன்ற எம்பிராட்டி அத்தடாகத்தில் அழகிய தாமரை மலரின் மேல் கண்களைக் கவரும் கட்டழகுடைய இளங்குழந்தை வடிவத்துடன் வீற்றிருந்தனள். அத்தெய்வக் குழந்தையை இமவான் கண்டு அடியேனை ஆட்கொள்ளும் பொருட்டு அகிலாண்ட கோடி ஈன்ற அன்னை குழந்தையாக வந்து அமர்ந்தனள் என்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, உரோமஞ் சிலிர்க்கப் பெருங்களிப்புற்று, "அடியேனின் தவம் பலித்தது" என்று ஆனந்தக் கூத்தாடி அம்பிகையைத் தொழுது குழந்தையைக் கரத்திலெடுத்துச் சென்னிமேல் தாங்கிக் கொண்டு, தனது பொன்மாளிகை புக்குத் தனது தரும பத்தினியாகிய மேனையின் கரத்திலே மகவை நல்கினன்.

பருவத ராஜனாற் கொடுக்கப் பெற்ற தெய்வக் குழவியை மேனை தொழுது வாங்கிக், குழந்தை கிடைத்த வரலாற்றைக் கேட்டு ஈசனாரது இன்னருளால் இம்மகவு கிடைத்தது என்று மனமகிழ்ந்து மார்போடு அணைத்தனள். கொங்கைகள் பால் சுரந்தன. பரிபுரம், தண்டை, சங்குவளை, ரத்தினச்சுட்டி, மதாணி, பொற்றோடு, அங்கதம் முதலிய பொன்னாபரணங்களைக் குழந்தைக்குத் தரித்துப் பொன்னாலாகிய தொட்டிலில் தாலாட்டி, உலகங்களையெல்லாம் ஈன்று வளர்த்த உலகமாதாவை மகளாகப் பெற்று வளர்த்தனள். பருவத ராஜனுக்கு மகளாக வந்ததனால் பார்வதி என்னும் திருப்பெயரைப் பெற்றனர்.

பார்வதியாருக்கு வயது ஐந்து ஆயிற்று. அத்தருணத்தில் அம்பிகை ஆலமுண்ட அண்ணலின் ஆணையை நினைத்து இமவானை நோக்கி, "ஐயா! மணிகண்டப் பெருமானை மணம் புரிந்து கொள்ளுமாறு அப்பெருமானைக் குறித்துத் தவம் புரிவேன். அதற்கு இம் மலையிலோர பால் தவச்சாலை ஒன்றை நியமித்தருள்வீர்" என்று கூறினர். அதனைக் கேட்ட மலையரையன், "அம்மா! தவம் என்பது சாமானியமன்று; உடல் வருந்தித் திடஞானத்துடன் செய்தல் வேண்டும்; அதற்கு இது பருவமன்று; உனக்கு வயது ஐந்தே நிறைந்துள்ளது; உன் உடல்

தவம் புரிவதற்கு வலி பெறவில்லை; ஆதலால், தவம் புரியும் எண்ணத்தைத் தவிர்தி" என்றனன். அங்ஙனமே தாயும் தடுத்தனள்.

உமாதேவி, "எந்தாய்! எவ்வுயிரையுங் காக்கவல்ல ஈசன் ஒருவனுண்டு; அவனருளின்றி யாரும் தம்மைத் தாமே காத்துக் கொள்ள இயலாது; இப்போது யான் கூறுவதும் அவன் திருவருளே; தடை செய்யாது விடை தாரும்" என, மன்னன் இசைந்து தவச்சாலை செய்து மகளை அதிலிருத்தி, அநேக கன்னியரைக் காவலராகச் செய்து வேண்டுவன செய்தான். பார்வதியார், தவச்சாலை சென்று கன்னியர் பலர் சூழ கண்ணுதற் பரமனை மனமொழி மெய்களால் வழிபாடு செய்து அருந்தவத்திருந்தனர். மலையரசனும், மேனையும், தினந்தோறும் மகளைப்போய் பார்த்துக்கொண்டிருந்தனர்.

'பன்னருஞ் சிறப்பின் மிக்க பனிவரை அரசன் தன்பால் கன்னியம் புதல்வியாகிக் கௌரி' தவம் புரிந்திருந்த காலை, அசுரர் குலத் தலைவனாம் சூரபன்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் அரசு செலுத்தி ஒப்பாரும் மிக்காருமின்றித் தருக்குற்றிருந்தனன். அந்தக் காலத்தில் சனகாதியர் நால்வரும் சிவபெருமானை நோக்கிப் பன்னெடுங் காலம் தவம் புரிந்து இறைவனருளால் கைலைமலையை அடைந்து, நந்திதேவர் காவல் புரிகின்ற முதல்வாயிலை அணுகி நந்தியெம் பெருமானை வணங்கி அவரருளால் சிவசந்நிதியுட் சென்று நான்முகன் முதலோர் காணா ஞானநாயகனைக் கண்டார்கள். தேவதேவனைக் கண்டவுடனே மொழிகுழற, முழுதுடல் புளகிக்க, விழிபுனல் பெருக, தீ சேர் மெழுகென உள்ளம் உருக, கரமலர் குவிய, இருதய மலர் மலர, ஹரஹர என்று தொழுது, "வானோர்க்கரிய மருந்தே போற்றி, ஏனோர்க்கெளிய இறைவா போற்றி" என்று துதித்து, "அருட்பெருங் கடலே! பொருட்பெருங் கடலாம் வேதமென்னும் புணரியில் மூழ்கி, புந்தி தெளியாது மயங்கியுள்ளோம்; மனம் சாந்தியை அடையவில்லை; அறியாமை நீங்கி மெய்யுணர்வு பெற்றோமில்லை; எமது மனம் அமைதியை அடையும் வழியைக் காட்டி நல்லருள் புரிந்தருள வேண்டும்" என்று விண்ணப்பம் புரிந்தனர்.

அடியார்க்கருளும் அருட்பெரும் வள்ளல் அகமகிழ்ந்து, "உமது மனமடங்கி மெய்யுணர்வு தலைப்படுமாறு கூறுதும்; இருங்கள்" என்று கூற சால்பெருந் தகைமை நால்வரும் பரமேசுவரனை வணங்கி அருகில் கைகுவித்த வண்ணமாக வீற்றிருந்தனர்.

சிவபெருமான் நந்தியங்கடவுளை நோக்கி, "மலர்க்கணைக் கிழவனாம் மன்மதன் தவிர வேறு யார் வந்தாலும் உள்ளே விட வேண்டாமென்று கட்டளையிட. நந்தீசர் "அங்ஙனமே" என்று, கோபுரவாசலில் காவல் புரிந்திருந்தனர். கல்லாலின் கீழ் வீற்றிருந்த கண்ணுதற் கடவுள் சனகாதியர்க்குச் சிவாகமங்களின் நுட்பங்களாகிய சரியை கிரியை யோகமென்ற முப்பாதங்களையும் கூற, சனகாதியர் "எந்தையே! எமக்கு மனமொடுங்குமாறு ஞானபாதத்தைப் போதிக்க வேண்டும்" என்று வேண்ட, புரமெரித்த புரிசடைக் கடவுள் புன்முறுவல் கொண்டு முனிவர்களை நோக்கி, அது வாக்கினால் கூறுவதன்று; இப்படி சும்மாயிருப்பதே ஆகுமென்று தமது திருமார்பிலமைத்த சின்முத்திரைக் கரத்தோடு, ஒரு கணப்போது யோகஞ் செய்வார் போல் மௌன நிலையைக் காட்டி வீற்றிருந்தனர்.

**இருவரும் உணரா அண்ணல் ஏனவெள் எயிறி யாமை**
**சிரநிறை அநந்த கோடி திளைத்திடும் உரத்திற் சீர்கொள்**
**கரதலம் ஒன்று சேர்த்தி மோனமுத் திரையைக் காட்டி**
**ஒருகணம் செயலொன்று இன்றி யோகுசெய் வாரின் உற்றான்.**

**வளரும்.**

# ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

திருமுறைச் செல்வர் கனடா சிவ. முத்துலிங்கம்

அருளரசராகிய சுந்தரரையும் புவியரசராகிய சேரமானையும் ஒன்றுபடச் செய்த பெருமை சிவபெருமானின் பாதச் சிலம்பொலிக்குரியதாகும்.

அண்டசராசரங்கள் அனைத்தையும் தன் அருள் நிழலில் வைத்து ஆள்பவனும் அவற்றைக் கடந்து விளங்குபவனுமாகிய எல்லாம் வல்ல பரம்பொருளாகிய கடவுளின் அருளையே எல்லா மதங்களும் நாடி நிற்கின்றன.

மதங்கள் எல்லாவற்றையும் நடுநிலையோடு ஆராய்ந்தால் அவற்றில் பல ஒற்றுமைகளும் ஒரே தத்துவங்களும் இருப்பதை அறிந்து கொள்ளலாம்.

அன்பாகிய நாரில் பலவகைப் பூக்களாகிய சமயங்கள் கோர்க்கப்பட்டுள்ளன. அன்பு வேறு கடவுள் வேறு அல்ல என்று எல்லாச் சமயங்களும் ஒத்துக் கொள்ளுகின்றன.

ஒவ்வொரு மதத்திலும் பல அனுபூதிமான்கள் தோன்றியுள்ளனர்.

சமயம் என்பது மக்கள் வாழ்க்கையின் உயிர் நாடி என்பதை மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்.

மொழி ஓர் இனத்தின் உயிர் போன்றதாகும். மொழி அழிந்தால் அம்மொழி பேசுகின்ற இனமும் அழிந்து போய்விடும்.

உள்ளத்தில் எது பதிந்துள்ளதோ அதுவே தான் பிரதிபலிக்கும்.

பன்னிரு திருமுறைகளும் பிரணவமாகிய ஓம் என்பதன் விரிவையே கூறுகின்றன.

உலகத்தை இறைவன் தாங்குகிறான். இறைவனை தருமம் தாங்குகின்றது.

வழிபாடு என்ற சொல்லுக்கு ஆண்டவனது வழியிலே நிற்றல் என்பது பொருள்.

இறைவனை உணர்ந்த ஒருவராலேதான் எல்லாப் படைப்புக்களிலும் இறைவனைக் காண முடியும்.

மன ஒருமைப்பாடு ஏற்படுகின்ற அளவுக்கு பக்தி உண்டாகின்றது.

நாங்கள் செலுத்தும் பக்தியின் அளவுக்குத் தக்கவாறு இறைவனுக்குச் சமீபத்தில் சென்று கொண்டிருக்கின்றோம்.

பக்தி மேலிட மேலிட நான், எனது என்பன அழிந்து விடுகின்றன.

இன்று உலகம் முழுவதிலுமே பணிவுக்கும் அன்புக்கும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. அதனால் பணிவையும் அன்பையும் மக்கள் மத்தியிலே நினைவூட்டி மக்களை பண்பாளர்களாக வாழ வைக்க வேண்டும்.

இளையவர்கள் முதியவர்களிடம் பணிவாக நடந்து கொள்ள வேண்டும் என்பதும் முதியவர்கள் இளையவர்களிடம் அன்புடையவர்களாக இருக்க வேண்டும் என்பதும் தொன்று தொட்டு வந்த மரபாகும்.

பணிவின்மைக்குக் காரணம் அகங்காரம். அன்பின்மைக்குக் காரணம் சுயநலம். அகங்காரமும் சுயநலமும் படிப்படியே தேயத்தேய பணிவும் அன்பும் வளர்ந்து வரும்.

இருள் இரண்டு வகை. அக இருள், புற இருள். சூரியன், சந்திரன், அக்கினி என்பன புற இருளைப் போக்குவன. குரு ஒருவரால் தான் அக இருளைப் போக்க முடியும்.

குரு என்ற சொல்லுக்கு இருளை நீக்குபவர் என்பது கருத்து. இந்த அக இருள்தான் அறியாமை அல்லது அகங்காரம் எனப்படும்.

அகங்காரம் பல உருவிலே வரக்கூடும். பணத்தினால் பட்டத்தினால், பதவியினால், கல்வியினால், பலத்தினால், அழகினால், குலத்தினால் இப்படி எத்தனையோ வழிகளால் அது தலையெடுக்கும். இவற்றினால் உண்டாகும் செருக்கு என்றும் அழியாது. இறைவன் கருணையினாலே தான் தேய வேண்டும். இவை தேய பணிவு உண்டாகும்.

பணிவு இல்லாமையினால் தான் மரியாதையும் இல்லாமல் போகின்றது. பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மையும் குறைந்து கொண்டு வருகின்றது. தன்னைப் போல பிறரை நேசிக்கும் பழக்கமும் அருகி வருகின்றது.

சுயநலம் தேயும் அளவிற்கு தியாக உணர்வு உண்டாகிறது. அன்பின் முதிர்ச்சி அருள். அருள் பழுத்த உள்ளத்திலே தான் தியாகம் பிறக்கிறது.

அகங்காரத்தினால் சுயநலமே வளர்ந்து வருகின்றது. குழந்தைகளுடைய உள்ளத்திலே பணிவையும் அன்பையும் பதிக்கும் அளவுக்கு அவர்கள் எதிர்காலத்தில் நல்ல பிரசைகளாக வாழ்வார்கள் என்பது திண்ணம்.

இறைவனது திருவருள் தமது கண்ணுக்குப் புலனாகாமலே நம்மை வாழ்வித்துக் கொண்டிருக்கிறது.

# ஆத்ம பரிபாகம்

(பகவத் சித்பவானந்த சுவாமிகள் எழுதியது)

பழுதுபட்டுப் போனதைப் புதியதாக மாற்றியமைக்கும் செயலை இயற்கை ஓயாது செய்து வருகிறது. உயிர் வகைகள் உடலின் மூலம் இலங்குகின்றன. மரம், செடி, கொடிகள் என்னும் உடல்களில் உயிர் இருக்கிறது. நடப்பன, பறப்பன, ஊர்வன, நீந்துவன ஆகிய உயிர்களும் விதவிதமான உடல்களை எடுத்திருக்கின்றன. இத்தனை வித உடல்கள் பழுதுதாய்விட்டால் மரணத்தின் மூலம் அவைகள் புதுப்பிக்கப்படுகின்றன. எங்கு திரும்பிப் பார்த்தாலும் நாம் கண்கூடாகக் காணும் காட்சி இது.

உயிரற்ற பொருள்களை செயற்கை முறையால் புதுப்பிக்க மனிதனுக்கு இயலும். இரும்பு பழுதுபட்டுப் போய்விடுகிறது. துருப்பிடித்து விடுகிறது. அங்ஙனம் பயன்படாது போன இரும்பு களையெல்லாம் ஒன்று சேர்த்து உலையில் இட்டு உருக்கி அதற்குப் புதிய வடிவம் கொடுத்து இரும்பாக அதை மாற்றிவிடலாம். உயிர் உடையன, உயிர் அற்றவை ஆகிய அனைத்தும் இங்ஙனம் ஏதேனும் ஒரு விதத்தில் புதிப்பிக்கப்பட்டு வருகின்றன.

மனிதன் நல்ல முறையில் திட்டம் போட்டுக் கொண்டு தன்னைப் புதுப்பித்துக்கொள்ளலாம். அப்படித் தன்னையே புதுப்பித்துக் கொள்ளும் செயலுக்குத் தவம் என்று பெயர். தவத்தின் மூலம் மனிதன் புதிய பிறப்பு எடுக்கிறான்; மேம்பட்டவனாக மாறி விடுகிறான். மனிதன் செய்யக்கூடிய செயல்களுள் தவம் புரிதல் சாலச்சிறந்தது. மனிதனுடைய அமைப்பில் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்று பகுதிகள் இருக்கின்றன. இந்த மூன்றில் நிகழும் நிகழ்ச்சிகளுக்கு சிந்தை, சொல், செயல் என்று பெயர். இம்மூவித இயல்புகளையும் மேலான லக்ஷியம் ஒன்றுக்குப் பயன்படுத்துங்கால் அது தவமாய் விடுகிறது. உயர்ந்த காரியத்துக்கு உடலைப் பயன்படுத்துமிடத்து அதற்கு ஆற்றல் அதிகரித்து விடுகிறது. மனிதன் விசனப்படுவது உடலின் மூலம் வெளியாகிறது. அவன் மகிழ்வுற்றிருப்பதும் உடலின் மூலம் வெளியாகிறது. தெய்வீக உணர்வு உள்ளத்தில் பொங்கி எழுகின்ற இடத்து உடலிலும் அதன் அறிகுறிகள் தென்படுகின்றன. அச்சத்தால் உடலில் மயிர்சிலிர்ப்பதுண்டு. மகிழ்ச்சியை முன்னிட்டும் மயிர் சிலிர்க்கிறது. அருள் நாட்டத்திலும் உடலில் மயிர்க் கூச்சு எடுக்கிறது. அத்தகைய உணர்வு மேல் நிலைக்குப் போகின்ற பொழுது

உடல் நடுங்கவும் செய்கிறது. அன்புக்கு அறிகுறியாகக் கைகூப்பி வணங்குகிறோம். அந்த அன்பைக் கடவுளிடத்துச் செலுத்துகின்ற இடத்து கைகளைத் தலை மீது வைத்து வணங்குகிறோம். இரண்டு காரணங்களை முன்னிட்டு நாம் கண்ணீர் சிந்துகிறோம். துக்கத்தால் வருவது துன்பக்கண்ணீர். இன்பத்தில் வருவது இன்பக்கண்ணீர். கடவுள் நாட்டம் அதிகரிக்கின்ற பொழுது இன்பக்கண்ணீர் தானாக வந்துவிடுகிறது. அருள் நாட்டம் என்னும் உணர்வு உள்ளத்தில் ஓங்குகின்ற பொழுது அது கொதிப்பது போன்ற ஒருவித உணர்வைப்பெற்று விடுகிறது. அருள் நாட்டம் ஓங்குகின்ற அளவு உள்ளத்தினின்று பொய்யான பாங்குகள் எல்லாம் தாமே நீங்கி விடுகின்றன. அந்தப் பெருநிலையிலிருந்து நா பேசுகின்ற பொழுது சீரிய கருத்துக்களே வெளியாகின்றன; கடவுள் பெருமையே போற்றப்படுகிறது. சன்மார்க்கங்கள் அனைத்திலும் தலை சிறந்தது அருள் தாகம் பிடித்திருப்பது. அருள் தாகம் பிடித்தவர்கள் உலக சம்பந்தமானமருள் நாட்டம் கொள்ளமாட்டார்கள். காந்தத்தை அணுகிய ஊசி மேலும் மேலும் காந்தத்தினிடத்தே போவது போன்று அருள் நாட்டம் கொண்டவர்கள் மேலும் மேலும் கடவுளையே நாடுகின்றனர்.

கை என்னும் சொல்லுக்கு உடலின் உறுப்பு என்கிற பொருள் இருப்பது போன்று நன்னெறி என்பது ஒரு பொருளாகிறது. அருள் தாகம் பிடித்தவர்கள் நன்னெறியினின்று ஒரு பொழுதும் பிசகுவது கிடையாது. மனிதன் திரிகரணங்களைக் கொண்டு தன்னைப் பக்குவப்படுத்துகின்ற பொழுது அவனுடைய பரிபாகத்தைக் கடவுளே நன்கு அறிகிறார். மனிதன் தானே தனது பரிபாகத்தை நன்கு அறிந்து கொள்ள முடியாது. அவன் அடைந்துள்ள பரிபாகத்தைக் கருணை கொண்டு காணும் கடவுள் பக்குவமடைந்த ஆத்மாவைத் தமக்கே உரியதாக்கிக் கொள்கிறான். இக்கோட்பாடுகளையெல்லாம் மாணிக்கவாசகர் ஒரு திருவாசகத்தில் வைத்து நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

**மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரை யார்கழற்குஎன்**
**கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்**
**பொய்தான் தவிர்ந்து உன்னைப்போற்றி சயசயபோற்றி யென்னும்**
**கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக் கண்டுகொள்ளே.**

# ஆலய வழிபாடு

(காஞ்சி – காமபீடம் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்)
தமிழாக்கம் திரு. கு.அம்பலவாணர், சுன்னாகம்

மனிதன் மற்றையோர்கட்குத் தொண்டு செய்யக் கிடைக்குஞ் சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்த வேண்டும். ஏழைகள் வேறுவழியில்லாவிடத்துச் சரீரத் தொண்டுகள் செய்யலாம். தனவந்தர் தமது பணத்தைக்கொண்டு பணிகளாற்றலாம். அதிகாரம், செல்வாக்கு என்பனவுடையோர் அவைகளைப் பயன்படுத்திச் சேவை புரிந்து மற்றையோரை உயர்நிலைக்குக் கொண்டுவரலாம். இவ்வித வழிகளை மேற்கொண்டு பொதுவாக யாவரும் சமூக சேவையில் ஊக்கங் காட்டலாம்.

இந்தியா செல்வங் குறைந்த நாடாகவிருந்தது. என்றாலும் ஏழை மக்கள் ஒற்றுமையுணர்ச்சியுடையராய்க் கோபுரங்களையும் கோவில்களையும் கட்டி முடித்தனர். தென்னிந்தியாவிலுள்ள கிராமங்களும் நகரங்களும் ஆலயங்களால் மகத்துவமும் வனப்பும் பெற்று விளங்குவதை நாம் காண்கிறோம். அக்காலத்துப் பொருளாதார நிலைக்கும், இக்காலத்துப் பொருளாதார முறைக்குமிடையில் மிக்க வித்தியாசங்கள் உள. அக்காலத்தில் மக்கட்கு வாழ்க்கைக்கு அவசியமாயிருந்த பொருட்கள் மிகச் சிலவே. அதிகமாகக் கிடைக்கக் கூடிய பொருட்களை வேதனமாகக் கொடுத்துப் பொதுக் கட்டிடங்கள் எழுப்பப்பட்டன. தேவாலயங்களும் பலவேண்டிய இடங்களில் அமைக்கப்பட்டன.

இன்றைய சமுதாயமும் அதற்குரிய தேவைகளும் புதிய முறையில் வகுக்கப்பட்டிருக்கின்றன. வித்தியாசாலைகள், வைத்தியசாலைகள், பணவங்கிகள் என்பவற்றையமைத்து நாட்டின் கண்ணே மக்கட்கிடையிலுள்ள அறியாமை, பிணி, வறுமை என்பவற்றைப் போக்கடிக்க எத்தனங்கள் கையாளப்படுகின்றன. இவைகளாற் பெரு நன்மைகள் கிடைத்துவிட்டனவென்று கூறிவிடவியலாது. கல்வி நாட்டில்

இவ்வளவு காலமாக விருத்தியெய்தியும் பொய், கைலஞ்சம், பிறர்பொருளைச் சூறையாடல் என்ற தீமைகள் நாட்டில் அதிகரித்து வருகின்றனவேயன்றிக் குறைந்தபாடில்லை. இன்றைய நவநாகரிகம் புகுந்து ஊறுவிளைவிக்காத மலைப்பிரதேசங்களில், காட்டுப் பகுதிகளில் வசிக்கும் பூர்வீக குடிமக்கள் நேர்மையும் நிதானமும், சத்தியமும் தவறாதவர்களாய்க் காணப்படுகின்றனர். நோய்கள் கிளம்பிய காலத்து குணப்படுத்த வைத்தியசாலைகள் உண்டெனவெண்ணி, மக்களில் அநேகர் நினைத்தபடி படுமோசமான வாழ்க்கையிற் புக அஞ்சுகின்றாரில்லை. கூட்டுறவுத் துறையில் உதவி புரிய ஏற்பட்ட பண வங்கிகள் ஏழை மக்களைப் பிடித்த வறுமையைச் செம்மைப் படுத்தியதாகக் காணோம்.

மனிதனுக்குத் தேவைகள் எவ்வளவுக்கு அதிகரித்துச் செல்கின்றனவோ, அவ்வளவுக்கு மன நிறைவும் சாந்தியும் ஏற்படாது கவலைகள் பெருகிச் செல்கின்றன. உயரிய நோக்கோடு கூடிய எளிய வாழ்க்கையை மேற்கொண்டோரே மனச் சாந்தியை அடையக் கூடியவர். நமது நாட்டின் சனசமூகத்தினர்க்குச் சொந்தமான ஆலயங்கள் பலவுள. ஆவுடையார் (திருப்பெருந்துறை) கோவிலில் எத்தனையோ புசல் அரிசி அவித்துப் பட்டைச் சாதமாக மிகக் குறைந்த விலைக்கு அளிக்கப்படுகின்றது. வேறும் அநேக ஆலயங்களில் விசேஷ விழாக்கள் நடக்கும் காலங்களில் அன்னதானமளிக்கப்படுகின்றது. அரசினரிலிருந்து பெறும் பல்வேறு சகாயங்கட்கு நாங்கள் நன்றி கூறுகின்றோம். அரசாங்கம் உரிய முறையில் கடமையாற்றற் பொருட்டு எத்தனையோ வரிகளை நாம் வழங்குகின்றோம். ஆலயங்களிடமாகக் கொண்டு நாம் பெறும் நன்மைகட்குத் தெய்வங்கட்கு நாம் நன்றி பகர வேண்டும். இவ்விதம் நாம் கூறும் நன்மை தான் யாகஞ் செய்வதென்பது இன்று வித்தியாசாலைகள், வாசிகசாலைகள், வைத்தியசாலைகள், கூட்டுறவுப்பணவங்கிகள் சமுதாய வளர்ச்சிக்கு அவசியந் தேவையாகவிருந்தாலும் கடவுளில் நம்பிக்கையும் பக்திசிரத்தையுமில்லாதவராயிருந்தால் அவைகள் நாம் கருதிய பயன்களை உரிய முறையில் அளிக்கமாட்டா. மனித சமூகத்தைப் பிடித்த கஷ்டங்கள் நீங்க வேண்டுமாயின் நாம் கடவுளது அனுக்கிரகத்தில் நம்பிக்கை வைத்து எக்கஷ்டங்களையுஞ் சகிக்க

ஆயத்தமாயிருக்க வேண்டும். கடவுள் பக்தியும் வேண்டுதலுமே அந்த ஆற்றலை நமக்கு அளிக்கக் கூடியன. ஆலயங்கட்கு முறையே சென்று வழிபட்டே பக்தியை வளர்க்கலாம். ஆகவே ஆலயங்கள் எல்லா இடங்களிலும் இருக்க வேண்டியது இன்றியமையாததெனப் பெறப்படுகின்றது.

விழாக்கள் புண்ணிய காலங்கள் நிகழும் போதெல்லாம் மக்கள் ஆலயங்கட்குச் சென்று, காணிக்கைகள் வழங்கி ஆராதனைகள் செய்கின்றார்கள். இதன் கருத்து யாது? சர்வ உலகங்களையும் சீவராசிகளையும் படைத்த அந்தப் பேராற்றல் வாய்ந்த நித்திய வஸ்துவை நாம் என்றும் மறவாது சிந்திக்கிறோம்; நன்றியறிதலுடையோம் என்பதைக் காட்டுதற்குத்தான். மனிதன் தனதாற்றலைக் கொண்டு ஓர் அணுவைத் தானும் அசைத்துவிடவியலாது. நாம் உண்பன உடுப்பனவற்றைக் கடவுளுக்கும் அர்ப்பணஞ் செய்கின்றோம். இல்லங்களிலிருந்து கடவுளுக்கு ஆராதனைகள், அர்ப்பணங்கள் செய்ய எல்லோருக்கும் வசதிகள் கிடைப்பது அரிது. ஆகையாற்றான் யாவரும் சென்று வணங்க ஆலயங்கள் பொதுவாக அமைக்கப்படலாயின.

கோயிலுக்குள்ளே சென்று தான் எல்லோரும் எப்போதும் கடவுளை வணங்கவேண்டுமென்ற நியதி கிடையாது. கோபுர தரிசனமொன்றே ஆத்மாவினை ஈடேற்றப் போதுமானது. தூல லிங்கமாகிய அக்கோபுரத்தைக் கண்டவுடன் எம்மையுடனிருந்து வாழவைக்கும் பரம் பொருளின் ஞாபகம், நமக்கு ஏற்படுகின்றது. ஆலய தரிசனம் சீரிய முறையில் திரிகரண சுத்தியுடன் செய்யப்படவேண்டியது. ஆலயத்திற் சென்று வழிபடும் போது கடவுளைத் தியானிக்க வேண்டும். குறைந்த பட்சம் வாரத்திற்கு ஒரு முறையாவது ஆலயத்துக்குச் செல்ல வேண்டும். மனத்தினை ஒரு வழிப்படுத்திக் கடவுளின் நாமத்தைச் செபித்தும், பஜனைகள் பாடியும் கடவுளைப் பூசிக்க வேண்டும். அப்படிச் செய்துவரின் நாம் விரும்பிய நன்மைகளையெல்லாம் இனிது அடையலாம்.

# "உபதேசம் செய்வதைக் காட்டிலும் உதாரணமாக நடந்து காட்டுவது சாலச்சிறந்தது"

## மதுரை மகாநாட்டில்

— கி. வா. ஜகந்நாதன் —

"முன்பு சென்னையில் நடைபெற்றது அகில இந்திய சமய மாநாடு. இன்று மதுரையில் நடப்பது உலக சமய, தத்துவ, மாநாடு, தமிழோடு இசைபாடல் மறந்தறியாத ஞானசம்பந்தப் பெருமான் வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க பாடுபட்ட புண்ணிய மூர்த்தி. சமயங்கள் ஆறு உண்டு என்றாலும், அனைத்தும் வேதத்தையே அடிப்படையாகக் கொண்டவை. அறம், பொருள். இன்பம், வீடு என்பதை எந்தப் பாஷையில் சொன்னாலும் ஒரே பொருளைத் தான் தரும். எவ்வாறு சூப்பர் மார்க்கெட் ஒன்றில் அனைவருக்கும் தேவையான எல்லாப் பொருள்களும் கிடைக்குமோ அதே போல இந்து சமயத்தில் எல்லாத் தெய்வங்களுக்கும் இடம் உண்டு. ஆகையால் அவரவர் தமது எண்ணத்திற்கு ஏற்றவாறு உருவங் கொடுத்து கடவுளை வழிபட முடியும். சென்னைக்கு மதுரையிலிருந்து ரயில் செல்கிறது என்று வைத்துக் கொண்டால் சென்னைக்கு டிக்கெட் வாங்கியவர்கள் ஏதேனும் ஒரு வகுப்பில் இடம் கொண்டிருப்பார்கள். வகுப்பு வாரி வேறுபாடு ரயிலுக்குக் கிடையாது. அது மேல் வகுப்புக்காரனுக்காக வேகமாகப் போகாது. கீழ் வகுப்புக்காரனுக்காக மெதுவாகவும் போகாது. யார் எந்தப் பெட்டியில் அமர்ந்தாலும், ஒரே வேகத்தில் சென்று சென்னையில் இறங்க வழி செய்யும். அதே போல சமயங்கள் பல இருந்து இட்டுச் சென்றாலும், அடைகின்ற குறிக்கோள் ஒன்றுதான். ஆறு சமயங்களின் முடிவும் மோட்சம் அடைந்து கடவுள் திருவடி அடைவது என்பதுவே.

உலகத்தின் பல்வேறு பகுதிகளில் ஓடிச் செல்லும் நதிகளெல்லாம் இறுதியாக ஒரு பெரும் கடலையே அடைகின்றன. அது போல எல்லாச் சமயங்களும் பரம் பொருளிடமே சென்று ஐக்கியமாக வழி வகுக்கின்றன.

சென்னையில் ஒரு பெண் இருக்கிறாள். மதுரையிலே ஒரு இளைஞன் இருக்கிறான். இருவருக்கும் ஜாதகப் பொருத்தம் சாதகமாகவே அமைகிறது. இருந்தாலும் இளைஞன் பெண்ணின் போட்டோவை வரவழைத்துப் பார்க்கிறான். அதன் பின்னர் பெண்ணை நேரிலேயும் பார்க்க வேண்டுமென்கிறான். அது போல நாம் முத்தியடைவது தான் நோக்கம் என்று கொண்டாலும், பல பெரியோர்கள் மந்திர சக்தியினால் தாம் உணர்ந்த தெய்வங்களின் தோற்றத்தை நமக்குச் சொல்லி யிருக்கிறார்கள். அதை நாம் கண்டு கொண்டு கும்பிடுகிறோம். காண வேண்டுமென்பது ஒன்று. அதைக் கொள்வது என்பது இரண்டு. இதைத்தான் 'கண்டு கொள்வது' என்று சொல்கிறோம். அப்படிப் பார்க்கையில் இந்தக் காலத்தில் சமயவாதிகள் தேவையில்லை. சமயத்துக்காகச் சண்டை போடுபவர்கள் வேண்டாம். சமயத்திலுள்ள வற்றைக் கண்டு கொண்டு பிரசாரம் செய்யக்கூடிய 'சமயவாணர்கள்' (சமயத்தில் வாழ்வு நடத்துபவர்கள் - சமய வாழ்நர்கள்) தேவை. நமது இந்து சமயமே ஒரு வாழ்க்கை முறை தான். இந்து சமயத்திற்கு தனிப்பட்ட முறையில் பெயர் எதுவும் கிடையாது.

இது என்றோ தோன்றிவிட்ட முதல் சமயம். பின்னால் வந்தவர்களே இதற்கு 'இந்து சமயம்' என்று பெயரிட்டு அழைத்தனர். எந்தச் சமயத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவர்கள் தத்தம் சமயத்தை நன்கு அறிந்தவராக இருக்க வேண்டும். சொந்தச் சமய அறிவு மாத்திரம் போதாது. அந்த சமயத்தைப் பின்பற்றி வாழ வேண்டும். உபதேசம் செய்வதைக் காட்டிலும் உதாரணமாக நடந்து காட்டுவது சாலச்சிறந்தது" என்றார்.

# சரஸ்வதி வழிபாடு அல்லது இறைஞானத்தின் உதயம்!

(ஸ்ரீ சுவாமி சிவானந்தர்)

சாதகன் ஒரு முறை தீமைக் குணங்களைப் போக்கி சாத்வீக தூய்மையான தெய்வீகப் பண்புகளை வளர்த்துக் கொள்வதில் வெற்றி பெறுவானேல் அவன் ஓர் அதிகாரியாகத் திகழ்கிறான். இப்பொழுது அவன் இறைஞான தெய்வீக ஒளியினைப் பெறத் தகுதி படைத்துள்ளான். இந்நிலையில் பிரம்ம ஞானமே உருவான, தெய்வீக ஞானத்தின் சின்னமாக ஸ்ரீ சரஸ்வதியின் பயபக்தியுடைய வழிபாடு வருகிறது. அவளது அழகுமிக்க வீணையின் நாதம் உயரிய மகாவாக்கியங்கள், பிரணவம் ஆகியவற்றின் ஸ்வரங்களை எழுப்புகின்றன. அவளது தூய பளபளக்கும் பனிவெள்ளைக் கலையினை பிரதிபலிக்கும் வகையில் அவள் தெய்வீக நாதக் கலையறிவை அளித்து முழு அளவில் ஆத்ம ஞானத்தினையும் தந்தருளுகின்றாள். ஆதலால் அறிவொளி கொடுக்கும் ஸ்ரீ சரஸ்வதிதேவியின் அனுக்கிரகம் பெற இறுதிப் பகுதி நாட்களான மூன்றாம் நிலை அமைந்துள்ளது.

பத்தாம் நாளான விஜயதசமி, கலைவாணியின் அருளால் ஞான உதயத்தின் மூலம் ஜீவ முக்தியடைந்ததில் உண்டான ஜீவனின் வெற்றிக்களிப்பைக் குறிப்பதாகும். ஜீவாத்மா சத், சித், ஆனந்த சொருபமாகிய தனக்கே உரிய பரமாத்மாவிடத்தில் இரண்டறக் கலந்த ஐக்கிய உணர்வில், அமைதி இன்பத்தில் திளைத்து இருக்கிறது. அழியாத்தன்மை, அறிவு, ஆனந்தம் ஆகிய மூன்றையுங் கொண்ட பரம்பொருள் இறுதி லட்சியம் நிறைவேறியதன் பயனாக இறுதி நாள் வெற்றி விழாவாகக் கொண்டாடப்படுகிறது. வெற்றிக் கொடி வானோங்கிப் பறக்கிறது.

# முத்தையாவுக்கு முத்தான வரவேற்பு

புலவர் விசூர்மாணிக்கம் - தமிழ்நாடு

அப்பா! "எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே, எந்தை நினது அருட்புகழை இயம்பியிடல் வேண்டும்" என்ற இராமலிங்க அடிகளாரின் அருட்பாவுக்கு இணங்க எல்லா நாடுகளுக்கும் சென்று இறைவனின் புகழ் பரப்பும் 'ஆத்மஜோதி' ஆசிரியர் சிவத்திரு. நா. முத்தையா அவர்கள் தமிழ்நாட்டுக்கு வருகைதரும் செய்தியறிந்து கழிபேருவகை அடைந்தேன்.

இதற்கு முன்பு அவர் 1981 ஆம் ஆண்டில் வருகை தந்தபோது 15 நாட்கள் அவரைப் பல ஊர்களுக்கும் அழைத்துச் சென்று அற்புதமான சொற்பொழிவுகளை ஆலயங்களிலும் இலக்கிய மன்றங்களிலும் ஆற்றச் செய்தவன் நான். மேலும் அடிகளாருடன் அந்தப் பதினைந்து நாட்களும் பெற்ற இனிய அனுபவங்களை "பல்கலைக் கழகத்துடன் பதினைந்து நாட்கள்" என்ற பயணக்கட்டுரையை 'ஆத்மஜோதி' இதழில் எழுதி அன்பர்கள் பலரின் பாராட்டுக்களைப் பெற்றவன் நான்.

அந்த நாட்களிலேயே நான் பணியாற்றும் களியாம்பூண்டி, அரசினர் உயர்நிலைப்பள்ளி தமிழ் இலக்கிய மன்றத்தில் அடிகளார் உரையாற்றி இருக்க வேண்டும். என்ன காரணத்தாலேயோ அப்போது அந்த வாய்ப்பு எங்கட்குக் கிடைக்கவில்லை. எனவே, இந்த ஆண்டு அவ்வாய்ப்பை இழந்துவிடுவோமோ?

மேலும் அடிகளாரின் வருகையை என்மூலம் அறிந்த என் பள்ளித் தலைமையாசிரியரும், உடன் பணியாற்றும் இருபாலாசிரியப் பெருமக்களும் அவசியம் இம்முறை அழைக்க வேண்டும் என பிரியமுடன் பேரார்வம் காட்டினர்.

அடிகளாரும் எங்களின் அழைப்பை ஏற்று வருகை புரிந்தார். அதன் விளைவாக, 7-1-83 வெள்ளிக்கிழமையன்று பிற்பகல் 3 மணி அளவில் உள்ளூர்ப் பிரமுகரும், தியாகி ஏ.கே. இராமகிருஷ்ணரெட்டியார் நடத்தும் "திக்கற்றோர் இல்லத்தின்" பொறுப்பாளருமான உயர்திரு இராம. இலட்சுமிபதிரெட்டியார் அவர்கள் இலக்கிய மன்ற விழாவிற்குத் தலைமை தாங்க, என் பள்ளித் தலைமையாசிரியர் உயர் திரு. சிவவெங்கடேசன் பி.ஏ.பி.டி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, நான் அறிமுகவுரையாற்றி வரவேற்புப் பாமடல் வாசித்துக் கொடுத்தென் இதோ அந்த வரவேற்புப் பாமலர்:

ஓமெனும் பொருளை உலகெலாம் உணர்ந்தே
உய்யுமா றருளும் உயர்ந்தோய்! வருக!
சைவமும் தமிழும் தழைத்தினி தோங்க
மெய்த்தொண் டாற்றும் மேலோய்! வருக!

ஈழம் என்னும் இணையிலா நாட்டின்
நாவலப் பிட்டி நாயகா! வருக!
பாவலன் எங்கள் பாரதி பாடிய
சிங்களத் தீவின் சிற்பியே! வருக!

முத்தாய் சேவை முனைந்தே ஆற்றும்
முத்தை யாவெனும் முனிவரே! வருக!
அகிலம் அனைத்தும் அன்புடன் வாழ
ஆவன செய்யும் ஆன்றோய்! வருக!

'ஆத்ம ஜோதி எனுமிதழ் நடத்தும்
ஆத்ம ஜோதி ஐயனே! வருக!
தங்கள் வருகையால் தனிப்பே ருவகை
எய்திநி ற்கின்றோம் ஏந்தலே! வருக!

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற
குறள்வழி தோன்றிய கோவே! வருக!
தமிழாய் இனிக்கும் தலைவா! நீடு
வாழ்க நீவிர் வருக! வருகவே!

என்று வரலாறு படைக்கும் இறையருள் பெற்ற வரலாற்று நாயகனுக்கு வரவேற்புப் பாமடல் வாசித்துக் கொடுத்த பின் தலைவர் முன்னுரையாற்றி முடிக்க – தமக்கேயுரிய நடையில் முத்தமிழ்க் கடலாம் முத்தையா அவர்கள் தம் பேருரையை ஆற்றத் தொடங்கினார்.

தத்துவத்தின் வித்தாக விளங்கும் அடிகளாரின் பேச்சு மாணவர்களின் முன் எடுபடுமோ? எடுபடாதோ? எனும் ஐயத்தில் ஆண்டவனைப் பிரார்த்தித்த வண்ணம் நானிருந்தேன். ஆனால் அடிகளாரின் பேச்சோ ஆரம்பத்திலேயே களைகட்டத் தொடங்கியது. அதனையறிந்ததும் என் ஏக்கமெல்லாம் எங்கோ பறந்தன.

இறைவனுடைய பேரருட்கருணைப் பெருக்கே அடிகளாரின் மூலம் அருளுரையாக வெளிவருவதை நான் அறியாதவன் அல்லன். இருந்தும் சபலம் அடைந்தேன். ஆனால் இறுதியில் (ச)பலம் அடைந்தேன் மேலும்,

அற்புதமான உரையென மாணவர்கள் உட்பட அனைவரும் பாராட்டினர். இன்னும் சிறிது நேரம் பேசியிருக்கலாமே! என்று பலரும் ஏங்கினர். அடிகளாரும் பேசியிருப்பார். ஆனால் வெளியூர் மாணவர்கள் வெளிச்சத்துடன் வீடுபோய்ச் சேர வேண்டுமே எனும் எங்களின் குறிப்பறிந்தே அடிகளார் தம் உரையைக் குறுகிய காலத்துக்குள் முடித்துக் கொண்டார்.

"குறிப்பிற் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்"

என்ற வள்ளுவனை உணராதவரா அடிகளார்? ம்.. மேலும் ஆசானாகப் பணியாற்றிய அனுபவமும் உண்டல்லவா?

எனவே, சுருங்கச் சொல்லி விளங்கவைத்தார். அடிகளார் மேலும் மாணவர்களைத் தம் பேச்சாற்றலால் காந்தம் போல் கவர்ந்து இழுத்தார். ஆரம்பத்திலேயே, வினாக்களைத் தொடுத்து மாணவர்களிடம்

விடைபெறும் ஒரு புதுமையைச் செய்தார் அடிகளார். இதனால் மாணவர்களின் மனமாகிய வண்டுகள் அடிகளாரின் அற்புதப் பேச்சாகிய தேனையுண்டு மயங்கின. மேலும்,

ஆரம்பத்திலேயே அடிகளார் மாணவர்களைப் பார்த்து நீங்கள் எல்லாம் யார்? என்று கேட்டார். மாணவர்களில் ஒருசிலர் நாங்கள் இந்தியர் என்றனர். ஒரு சிலர் தமிழர் என்றனர். ஆனால் அடிகளாரோ நீங்கள் எல்லாம் சொல்வது தவறு என்று கூடச் சுட்டிக்காட்டாமல், இன்னும் கொஞ்சம் சிறப்பாகச் சிந்தியுங்கள் என்றார்.

மாணவர்கள் ஆழ்ந்து சிந்தித்து அமைதியை மேற்கொள்ள - அதற்குள் அடிகளாரே நாங்கள் மனிதர்கள் என்று சொல்லுங்கள் என்று கூறி அனைவருடைய மனதையும் தொட்டார். மேலும் நீங்கள் இந்தியனாக இருக்கலாம். இல்லை ரஷ்யன். ஆங்கிலேயன். அமெரிக்கன் என்று பலவாறாகவும் இருக்கலாம். ஆனால் நாம் அனைவரும் ஒன்றைமட்டும் மறந்து விடக்கூடாது. நாம் அனைவரும் மனிதர்கள். நாடு, மொழி, இனம் ஆகிய அனைத்தையும் கடந்து மனிதர்கள் என்ற ஒருமைப்பாட்டு உணர்வில் ஊறவேண்டும் என்றார்.

அனைவரும் அடிகளாரின் ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வைக் கண்டு உருகி நின்றோம். மீண்டும், உங்களில் நல்லவன் யார்? கையை உயர்த்துங்கள் என்றார். மாணவர்கள் முதலில் சற்றே தயங்கினாலும் பின்னர் ஓரிருவர் கையை உயர்த்தினர். அதனைக் கண்ட அடிகளார் ஏன்? உங்கட்கே சந்தேகம். உங்களின் மேல் உங்களுக்கே நம்பிக்கையில்லையா? நீங்கள் நல்லவர்கள் இல்லையா? என்று கூறி நம்மீது நாமே நம்பிக்கை வைக்கவேண்டும். நமக்கே நம்மீது நம்பிக்கையில்லையென்றால் நம்மீது எப்படி பிறர் நம்பிக்கை வைப்பார்கள். எனவே நம்பிக்கை வேண்டும் என்றார். தெரிந்தோ தெரியாமலோ தவறு செய்திருந்தாலும் திருத்திக்கொள்ள வேண்டும். மீண்டும் தவறு நேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றெல்லாம் சிந்திக்கத் தூண்டினார். மேலும் பாடங்களை மன ஒருமைப்பாட்டுடன் படித்தால் தான் புரியும் என்றார்.

ஆன்மீக வாழ்விலும் ஆண்டவனைப் புரிந்துகொள்ள மன ஒருமைப்பாடு அவசியம் என்றார். 'ஒருமையுடன் நினதுதிருவடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்' என்று பாடிய வள்ளலை

இராமலிங்கரை நினைவூட்டினார். மேலும் 'மன ஒருமை' அவசியம் என்பதை விஞ்ஞான ரீதியிலும் விளக்கிக் காட்டினார். அதாவது,

விரிந்து பரந்து பிரகாசிக்கின்ற சூரியனுடைய வெப்பம் பட்டால் பஞ்சோ மற்ற பொருள்களோ தீப்பிடித்து எரியாது. ஆனால் அதே சூரிய ஒளியில் குவிலென்ஸ் என்ற கண்ணாடியைப் பிடித்து சிறிது நேரம் பஞ்சின் மீதோ மற்றப் பொருள்களின் மீதோ காட்டி நின்றால் சிறிது நேரத்தில் தீப்பிடித்து எரியும்.

அதுபோல் விரிந்து பரந்து கிடக்கும் மனம் குவிந்தால்தான்- ஒன்றி- ஒன்றில் நிலைத்தால் தான் ஒன்றைப் பற்றமுடியும். எனவே மாணவர்கள் மனம் ஒன்றிப் படிக்கவேண்டும் என்று கூறினார். மாணவர்களில் பலர் படிப்பதில்லை. படிப்பது போல் நடிக்கின்றனர். மாந்தரிலும் பலர் பக்தர்களைப் போல் நடிக்கின்றனர். நடிப்பால் பயன் விளையாது என்றார். மன ஒருமைக்குத் தியானம் அவசியம் என்றார்.

நாம் நம் வீடுகளில் அன்றாடம் தியானத்தில் உட்கார்ந்து பழகினால் மன ஒருமை சில நாட்களில் கைகூடும் என்றார். மேலும்,

இந்தோனேஷியாவில் வீட்டுக்கு வீடு கூட்டுவழிபாடு செய்வதும், அனைத்து வீட்டாரும் ஒவ்வொரு வீட்டுக்கும் வந்து கலந்து கொள்வதையும் எடுத்துக்காட்டினார். அமெரிக்கா போன்ற முதலாளித்துவ நாடுகளில் கூட 25 ஆவது மாடியில் இருந்து விழுந்து இறக்கிறார்களே! ஏன்? மனதில் அமைதி இல்லை. பணத்தால் மட்டும், படித்துப் பெறும் பட்டங்களால் மட்டும் மனதில் அமைதி வந்துவிடாது.

தமிழ் நாட்டில் பாண்டிச்சேரிக்குப் பக்கத்தில் உள்ள 'அரோவில்' நகரில் பலநாட்டு மக்களும் அமைதி தேடிவந்து வாழ்வதைச் சுட்டிக்காட்டினார். ஜெர்மன் நாட்டில் வாழும் மக்கள் நாங்கள் தற்கொலை செய்துகொள்ள உரிமை வேண்டும் என்றனர். காரணம் இனி யுத்தம் என்ற ஒன்று வந்து அதன் விளைவால் அணுகுண்டு போன்ற தீய சக்திகளால் ஏற்படும் நச்சுக்காற்றைச் சுவாசித்து உடல்

ஊனமுற்று, நோய் வாய்ப்பட்டு நலிந்து மெலிந்து சாவதைவிட தற்கொலையே மேல் அல்லவா?

எனவேதான், அரசிடம் அவர்கள் அனுமதி வேண்டினர். பல நாடுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் ஏவுகணைத்தளம் அமைப்பதைப் பெண்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தின் மூலம் தடுத்து நிறுத்துகின்றனர். மேலும் உலகம் எங்கோ போய்க் கொண்டிருக்கிறது. விஞ்ஞானம் தேவைதான். அதற்காக விபரீத விஞ்ஞானத்தால் நாட்டுக்கு நாடு அச்சுறுத்திக்கொண்டு அணு ஆயதங்களால் அழித்துக்கொண்டு சாவது நல்லதல்ல என்றார்.

விஞ்ஞானத்திலும் மெய்ஞ்ஞானம் கலந்து ஆன்மநேய ஒருமைப்பாடு அதாவது மனிதாபிமானம் வளரவேண்டும் என்றார். மேலும் இடையிடையே பாட்டிக்கதைகளையும் சொல்லி நல்ல பல பண்பு விதைகளைத் தூவினார். எதிர்காலத்திலாவது மாணவர் உலகம் ஏற்றமுற விளங்கினால் நற்பயன் விளையும் என்பது அடிகளாரின் பேரவா. நாமே வாழணும். வளரணும் என்ற பேராசைப் பேய் பிடித்து ஆட்டும் இப்போதை உலகில் அடிகளாரைப் போன்ற ஆன்மநேய ஒருமைப்பாட்டாளர்களின் சேவையை எண்ணி அனைவரும் பாராட்டினர்.

அனுபவம் முதிர்ந்த 80 வயதுப்பாட்டி ஒருத்தி ஊசியிலே நூல் கோர்த்துத் தைக்கும் வழக்கம் உடையவள். ஒருநாள் ஊசியைத்தொலைத்துவிட்டாள். அதனை வீட்டிற்கு வெளியே சென்று தேடினாள். அனைவரும் பாட்டி! என்ன தேடுகிறாய்? என்றனர். ஊசியை என்றாள். பாட்டி எங்கே தொலைத்தாய் என்றனர். வீட்டிற்குள் என்றாள். பின் அங்கே தேடாமல் இங்கே தேடினால் எப்படிக் கிடைக்கும் என்றனர்.

அதற்குப் பாட்டி இங்கே தானே நிலாவெளிச்சம் இருக்கிறது என்றாள். அனைவரும் பாட்டியின் அறியாமையைக் கண்டு நகைத்தனர்.

அப்பாட்டியைப் போல் நாம் அறியாமையில் மூழ்கிக் கிடக்கிறோம். ஞானிகள் நம் நிலைகண்டு நகைக்கின்றனர் என்றார். மேலும் அவர் தன்பேச்சில் குரங்கு சும்மா இருக்காது. அதுவும் கள் வேறு குடிக்கிறது.

கள் மட்டுமல்ல. அக்குரங்கினைத் தேளும் கொட்டி விட்டது. எப்படி இருக்கும்? அதன் ஆட்டம் சொல்லில் அடங்குமா?

அதுபோல் நம் மனமும் ஒரு குரங்கு. அம் மனக்குரங்கு சும்மா இருக்குமா? மேலும் ஆசையாகிய கள்ளைக் குடித்து ஆட்டம் போடுகிறது. போதாக் குறைக்குப் பொறாமையெனும் தேள் கொட்டினால் எப்படி இருக்கும்.

என்று கேட்டு அனைவரையும் சிந்திக்கத் தூண்டினார். மேலும் கோயில்களில் கூட்டம் இல்லை. ஆனால் சினிமாக் கொட்டகையில் கூட்டம் நிரம்பி வழிகிறது. வெயிலில் கால்கடுக்க நிற்கிறார்கள். சிலர் கொட்டகைகளில் உதை வாங்கிக்கொண்டு உள்ளே நுழைகிறார்கள். சிலர் உயிரைக் கூட தியாகம் செய்து செத்தும் மடிகிறார்கள்.

என்ன செய்வது? மனம் அந்த அளவுக்கு எங்கோ போய் பேயாட்டம் போட்டுப் பேதலித்துக் கெடுகிறது. 'மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்' என்றார் உலகநாதன். யார் கேட்கிறார்கள்? என்று அடிகளார் மிகவும் மாந்தரின் நிலைகண்டு வேதனைப்பட்டார். உலகம் ஒன்றுபட்டு ஓங்கிவாழக் கடவுளைப் பிரார்த்தித்தார். மேலும் கள் குடித்தவன் கேட்பானாம் எவன் பாலைக் குடிப்பான்? பாலைக் குடிப்பவன் பயித்தியக்காரன் என்பானாம். அதுமட்டுமல்ல, குடிகாரன் சாலையில் போகும் போது பிறர் மீது மோதிவிட்டு என்னடா? என்னைக் குடிகாரன் என்று நினைத்தாயா? என்பானாம்.


என்றெல்லாம் கூறி இன்றைய நாட்டு நிலையை எடுத்துக் காட்டினார் அடிகளார். மேலும் ஒரு கோயிலில் சும்மா பேசாமல் உட்கார்ந்திருக்கும் சாமியாருக்கு ஒரு பட்டைச் சாதம். உழைப்பவனுக்கு அரைப்பட்டைச் சாதம் என்று ஆலய நிர்வாகி எழுதியிருந்தாராம். புதிதாக வந்த ஆலய நிர்வாகி என்ன அநியாயம் இது? உழைப்பவனுக்கு அரைப்பட்டை உட்கார்ந்திருப்பவனுக்கு ஒரு பட்டை என்று கடுகடுத்தாராம். அங்கிருப்பவர்கள். ஐயா! ஒருநாள் முழுவதும் தாங்கள் பேசாமல் உட்கார்ந்து பாருங்கள் அருமை தெரியும் என்றனர்.


அதன்படியே அவரும் உட்கார்ந்து பார்த்து அப்பப்பா! ரொம்ப கஷ்டம். இனி அந்தச் சாமியாருக்கு ஒருபட்டை போதாது இரண்டு பட்டை தரணும் என்று எழுதினாராம். எனவே: சும்மாயிருப்பதே சுகம் எனத் தோன்றும். அருணகிரியை ஆட்கொண்ட ஐயன் முருகப்பெருமானும் அருணகிரிக்கு முதன் முதல் ஆணையிட்டதும் 'சொல்லற சும்மாயிரு' என்பதுதானே!......ம...! எனவே, நாள்தோறும் தியானம்' செய்யப் பழகிக் கொள்ளுங்கள் சுகம் கிடைக்கும் என்றார். இவ்வாறெல்லாம் அடிகளார் "கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்பமொழிந்து" தம் இனிய பேருரையை முடித்தார். பின்னர் தலைவர் முடிவுரையாற்ற, முன்னாள் மானாம்பதி கிராம அதிகாரி திரு.ஆ.முத்துசாமி முதலியார் அடிகளாரைப் பாராட்டிப் பேச. திரு.எஸ்.பி.இராமனுஜம் அவர்கள் நன்றியுரையாற்ற நாட்டுப் பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது. பின்னர் இரவு 8.00 மணிக்கு அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயத்தில் 'ஆன்மீக சிந்தனை' என்னும் பொருள் பற்றி விரிவுரையாற்றினார்.


## கிருபானந்தவாரியாரின் பத்துப் பொன்மொழிகள்


1. உணவு தேடுவதோடு உணர்வுந் தேடு
2. மாசிலா மனமே ஈசன் கோயில்.
3. பயிருக்கு முள்வேலி, பணத்திற்குத் தருமம் வேலி.
4. பாலும் தேனும் உடலுக்கு உறுதி, வேலும் மயிலும் உயிருக்கு உறுதி.
5. உள்ளம் வசமானால் உலகம் வசமாகும்.
6. ஒருமை உணர்வு இருமையும் தரும்.
7. ஆறுதலையமலன் ஆறுதலை அருள்வான்.
8. எல்லா உயிரும் ஈசன் கோயில்.
9. அயர்ச்சி இல்லா முயற்சி உயர்ச்சி தரும்.
10. வேலையுடையவனிடத்தில் வேலை கேள்.


# யோகஸ்தானம்

























06


07


08


09


10


11


12

உடல் உள சமூக ஆரோக்கிய ஆன்மீகத்திற்கு உரிய ஒரே ஒரு பயிற்சி யோக என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. இது அவர்களுடைய பயிற்சியல்ல. தமிழர்களினதும் இந்துக்களினதும் இவ்யோக பரம்பரைச் சொத்து. யோகத்திற்கு அதிபதி ஆதிசிவன், அவரிடம் இருந்து யோகிபதஞ்சலிக்கு யோகப் பயிற்சி வழங்கப்பட்டு பதஞ்சலி ஊடாக உலகவாழ் மக்களுக்கு கிடைக்கப்பெற்றது.

யோகப்பயிற்சி உடனடியாக விருப்பமான வடிவான படங்களில் பார்த்து செய்வது தவறு முதலில் அட்டாங்கயோக விளக்கம் தெரிந்து கொள்ள வேண்டும். அதன் பின்னர் உடலைத்தளர்த்தும் யோககிரிகா பயிற்சிகள் செய்யப்பட்ட பின்னரே செய்யப்படல் வேண்டும் என்பது விதிமுறையாகும். இதில் இம்முறை சூரியநமஸ்காரத்தைப் பார்ப்போம். ஆசனங்கள் யாவும் நேரில் குழுவிடம் கற்றல் வேண்டும்.

**சூரிய நமஸ்காரத்தின் பலன்கள்**

1. உடலில் இறுக்க நிலை தளர்த்தப்படுகின்றது.
2. நரம்பு மண்டலம் முறுக்கேற்றப்படுகின்றது.
3. சேம்பல், தளர்ச்சி நீங்குகின்றது.
4. குருதி சுற்றோட்டம் பூரணமாக்கப்படுகின்றது.
5. தேக்க நிலையில் இருக்கும் கழிவுவாயுக்கள், நீர் யாவும் அகற்றப்படுகின்றது. வேலை துரிதமாக நடைபெறும்.
6. இதர ஆசனங்கள் செய்ய இலகுவாக இருக்கும். இப்படி பல நன்மைகள் அடங்குகின்றன.

பயிற்சி நிலையம்
நாவலர் மணிமண்டபம்
நல்லூர்.

ப.லி. சிவனேஸ்வராஜா,
யோகா போதனாசிரியர்
(யோகக்கேந்திரா பெங்களூர்)

**(ஆண் பெண் இருபாலரும்.)**

# புரட்டாதிச்சனி விரதம்

## இளைப்பாறிய ஆசிரியை திருமதி பவளம் சண்முகம்

இறைவனே எல்லோரையும் காத்து இரட்சிக்கிறான் என்பது எல்லா மதங்களிலும் இருந்த போதிலும், நவநாயகர் என்று சொல்லக்கூடிய நவக்கிரகங்களின் பரிபாலனம் தான் நடக்கிறதென்பதை நம் முன்னோர்களின் 'எல்லாம் அந்தக் கிரகம் பண்ணுகிற வேலை' என்று சொன்ன சொல் கேட்கிறது. நல்லது கெட்டது சுகம்-துக்கம் , உயர்வு-தாழ்வு வறுமை போன்றவற்றை அளித்து பரிபாலிக்கிறது சனி எனலாம். சனீஸ்வரன் சனிபகவான் என்று போற்றப்படுகிறார். சூரியன் கன்னியில் வரும் மாதமாகிய புரட்டாதிச்சனி விரதம் ஆரம்பம். சூரியபகவானின் புத்திரன் சனி நல்ல கறுப்பு நிறம். தாமத குணம். ஒல்லியான சரீரம் தலையிலும் உடம்பிலும் முரட்டு முடி. இவரது தானியம் எள்ளு. துவர்பு சுவை நீலக்கல் (இரத்தினம்). இவரது வாகனம் காகம் என்று சோதிடம் சொல்லும். சனியைப் போல கொடுப்பாரும் இல்லை கெடுப்பாரும் இல்லை என்ற பழமொழி உண்டு. எத்தனையோ மன்னர்கள் இராச்சியங்கள், மனிதர்கள் சனீஸ்வரனால் அழிந்து ஒழிந்ததற்கு பல பல கதைகளுள் ஒன்று பின்வருமாறு.

நிடத நாட்டு மன்னன் நளமகாராசன் ஒருநாள் தன் பாதங்களைக் கழுவும்போது புறங்கால் நனையவில்லை. அதனைச் சாட்டி நளனைப்பற்றிக் கொண்டான் சனி. நம்புங்கள், நளன் நாட்டை இழந்து மனைவியுடன் கானகம் சென்று பின்பு மனைவியையும் பிரிந்து எத்தனை எத்தனை துன்பங்களை அநுபவித்தான்! இது மட்டுமல்ல சனி 4ல் இருப்பின் சிக்கல். தொழில் மந்தம், வாகனப்பிரச்சனை, சனி 7ல் களத்திர இடைஞ்சல். 8ல் கண்டம் குடும்பம் சிக்கல் 12ல் சஞ்சாரம் அலைச்சல் என்று ஏராளம்.

நளன் வழிபட்டு விமோசனம் பெற்ற முக்கிய திருத்தலம் திருநள்ளாறு. ஆயுள், மரணம் இரண்டிற்கும் உரியவன் சனி ஆகவே மக்கள் பல்லாண்டு காலமாக இவ்விரதத்தை அனுட்டித்து வருகிறார்கள். நெய்விளக்கு ஏற்றி தியானம் வழிபாடுகள் செய்தும், திருநள்ளாற்றுக்கு

போக முடியாதவர்கள் மனத்தே அனைத்தையும் கண்டு காகத்திற்கு உண்ணும் முன் கூப்பிட்டு எள்சாதம் வைத்தும் வழிபடுமுறை நம்நாட்டில் உண்டு. ஒவ்வொருவரும் தாம் வழிபடு கடவுளை மனத்தே வைத்து தெய்வம் ஒன்றே என்ற சிந்தனை உடையராய் மந்திரங்களை திருப்பாடல்களை ஓதிவழிபட வேண்டும். இது ஆன்ம வளர்ச்சிக்கு பெரிதும் துணை புரியும். நாம் எத்தெய்வமாக வழிபட்டாலும் அத்தெய்வமாக நின்று அருள் செய்பவன் இறைவன்.

'யாதொரு தெய்வம் கொண்டீர் அத் தெய்வம் ஆகி யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்'- சிவஞானசித்தியார்.

கிரகங்களின் நிலையைக் கொண்டு வாழ்வியல் நிகழ்வுகளை ஓரளவு அறியலாம்...... இந்த நிகழ்வுகளுக்கு கிரகங்கள் காரணம் அல்ல. எமது வினைப்பயனின் படி அவை நிகழ்கின்றன. கிரகங்களின் இயக்கத்திற்கும் இறைவனே காரணம். கோளறு பதிகத்தில் ஞானசம்பந்தர் உண்மையாக யார் ஒருவர் சிவபெருமானை உள்ளத்தில் இருத்தி வழிபடுவாரோ அவருக்கு கிரகங்கள் நல்லனவாக அமையும் என்பதே பதிகம் கூறும் வரலாறு.

சிவபெருமானை பக்தியோடு வழிபடுபவர்களுக்கு கிரகங்கள் காட்டும் கறைகள் எல்லாம் நீங்குவது திண்ணம்.

இறுதியாக இறைவனையே சனீஸ்வரன் பிடித்த கதை ஒன்று உண்டு. நாரதர் சனீஸ்வரரிடம் நீ இந்த உலகத்தில் எல்லாரையும் பிடித்து ஆட்டி அலைக்கிறாய். எங்கே சிவனை ஆட்டமுடியுமா? என சனீஸ்வரன் சிவனைப் பிடிக்கப்போனான். பெருமான் எல்லாம் அறிந்தவர். இறைவனல்லவா. இறைவன் தண்ணீர் தடாகத்தில் குளித்துக் கொண்டு நின்றவர் சனிவருவதைக் கண்டு தண்ணீருக்கு அடியில் சில நிமிடம் மறைந்து விட்டார். சனி நாரதரிடம் கைகொட்டி எங்கள் சிவனையே தண்ணீரில் அமிழ்த்தினேன் என்றால் என் நிலை அறிந்தீர்களா என்று கூறினான்.

# நயினை உறைநாயகி

வித்துவான் திருமதி . வசந்தா வைத்தியநாதன்

"நாயகி நான்முகி நாராயணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாரகி சூலினி மாதங்கி என்(று)
ஆயகி லாதி யுடையாள் சரணம் அரணமக்கே"

-அபிராமி அந்தாதி

"அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி
எடுத்த கருமங்கள் ஆகா ..........."

என்பது ஆன்றோர் மெய்மொழி. நாம் நினைப்பவையெல்லாம் நமது நினைப்பின் வழியே முடிவெய்துமானால் இறைவன் எதற்கு? நமது எண்ணங்கள் வழியே உலகம் இயங்குவதினால் எங்கும் நான், எனது என்ற தன்னலந்தானே தலைவிரிக்கும். 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்ற சொல் பொய்த்துப் பயனிழக்குமன்றோ!

தன்னலத்தைப் போக்கி இறைநலத்தை நினைவில் பதிப்பதற்காகத்தான் ஒருசில செயல்கள் நாம் என்னதான் சிரமமாக செயலாற்ற நினைத்தாலும், அவ்வினை முடிவுறும் காலத்தானன்றி முடிவுறாமல், நமக்கோர் வினாக்குறியாகின்றது. இத்தகைய செயல்களில் நாம் ஆற்றொழுக்காகச் சென்று இறைவனின் திருவருளுக்கே முழுப்பொறுப்பையும் விட்டு விடவேண்டும், இல்லையெனில் இடர்ப்படநேரும்.

"நன்றே வருகினும் தீதே விளைகினும் நானறிவ
தொன்றேயு மில்லை உனக்கே பரமெனக் குள்ளவெல்லாம்
அன்றே உனதென் றளித்து விட்டேனழி யாதகுணக்
குன்றே அருட்கட லேஇம வான்பெற்ற கோமளமே"

-அபிராமி அந்தாதி

என்று அபிராமிப்பட்டர் எய்திய எண்ணத்தின் திண்ணிய நிலை பெற நாம் ஒவ்வொருவரும் முயல வேண்டும்.

**"எண்ணிய எண்ணியாங் கெய்துவர் எண்ணியர்**
**திண்ணிய ராகப் பெறின்.**

என்பது பொய்யா மறை அல்லவா?

இத்தகைய இறையருளை விளக்கும் நிகழ்ச்சி ஒன்று எங்கள் வாழ்வில் நிகழ்ந்தது. நீண்டகாலமாகவே, அலை பயில் திருநகராம் நயினாதீவு சென்று அங்கு அருள் பாலிக்கும் அரவணி அழகியாம் அகில உலக நாயகியைக் கண்டு கண்படைத்த பயனைப் பெற வேண்டுமென்னும் பேரவா எங்கள் உள்ளத்தில் முகிழ்ந்து மலர்ந்திருந்தது. நாங்கள் மும்முறை முயன்றும், எங்கள் முயற்சியில் தோல்வியையே சந்தித்தோம். அதன் பின்பு எங்கள் முயற்சியை விடுத்து அவளது திருவருளையே நம்பினோம். அன்னையின் ஆணையின் வண்ணமே எச்செயலும் நிகழும் என்ற உறுதியில், எண்ணத்தில், தினமும் அன்னையை வந்தித்து வணங்கினோம்.

வணங்கியது வீணாகவில்லை. காத்திருந்தது பொய்க்கவில்லை. அன்னை பராசக்திக்குரிய ஒன்பான் இரவுகளில் (நவராத்திரி) சரஸ்வதி பூஜை அன்று நினையா விதமாக அப்பேறு எங்களுக்கு வாய்த்தது. நாங்கள் நினைத்தது சாதாரண நாட்களில் ஒரு நாளிலே அன்னையைத்தரிசிக்க, அன்னை அழைத்ததோ சிறப்பான நாட்களுள் சிகரமான நாளிலே - நாங்கள் கேட்டது பொது. அன்னை அருளியது சிறப்பு. குழந்தைகள் எல்லாவற்றையும், எப்பொழுதும்தான் விரும்பும். ஆனால் ஈன்றவளுக்குத் தானே எந்தக்குழந்தைக்கு எப்பொழுது எதையளிக்க வேண்டுமென்று தெரியும்.

11-10-67 அன்று காலை 3.30 மணியளவில் கொழும்பில் நின்று கிளம்பிய உந்தூர்தி ஏறக்குறைய 11-45 க்கு புங்குடுதீவு (இறுப்பிட்டி) துறையை அடைந்தது. ஒரு சிலவினாடிகள் தாமதித்து 12-00 மணி

அளவில் இயந்திர படகு ஒன்று எங்களைச் சுமந்த வண்ணம் நீரைக் கிழித்து முன்னேறியது. சிறிது தொலைவு சென்றவுடனேயே இலிங்கமாகிய கோபுரம் காட்சி வழங்கியது. அதனையே அன்னையின் திருவடிச் சரணங்களாகக்கொண்டு சிரம் தாழ்த்தினோம் 12-30 மணியளவில் நாவாய் நாகபூஷணியின் திருவடிக் கமலங்களைத் தஞ்சமடைந்தது.

நயினைத்தீவின் மண்ணைத்தீண்டியவுடன் உடலெங்கும் ஓருவிதப் புல்லரிப்பு. நாயேனையும் நினைவின்றி ஆட்கொண்ட தாயின் தண்ணளியை உன்னி, உன்னி உள்ளத்தில் உரையளித்த நிலை எதிரே.....தனது விழிகளை இமைத்துத் திறப்பதாலேயே உலகினை ஆக்கி அழிக்கும் அன்னை பராபரரை (உன்மேஷ - நிமிசேத்பன்ன – விபன்ன புவனாவல்யை –லலிதா ஸஹஸ்ர நாமம்) கோதிலா அமுதா குறைவிலா நிறைவாக, வீறார்த்த திருக்கோலத்தில் வீழ்ந்திருந்து, தன்னடி உன்னி வருபவர்களை பாசப்பிழிவுடன் வா-வா..... வினாடியும் வீணாக்காது ஓடிவா என்று அழைப்பதைப் போன்று ஆலய மணியின் ஓங்கார நாதம். நாற்புறமும் நெடுநீளப் புணரி தன் அலைக்கரங்களால் ‘சேரவாரும் ஜெகத்தீரே’ ஜெகன் மாதாவின் கருணைப் பெரு வெள்ளத்தில் திளைக்க என்று அழைக்கும் அழகு. இதற்குமிடையே எங்கள் குடும்பநண்பர் தம் அன்புக் கரம் நீட்டி எங்களை எதிர் கொண்டழைத்தது அன்னையே அழைப்பது போன்று இருந்தது. இத்தனையுமாகச் சேர்ந்து எங்களைத் தன்னிலை இழக்கச் செய்து விட்டது.

அன்னையின் உச்சிக்காலப் பூஜையைக் கண்டு ஆனந்தித்து பிறகு ஆலயப் பிரதம ஆசாரியின் அன்பு வலைக்குள் பிணிக்கப்பட்டு; உரையாடி மகிழ்ந்து பின்பு அவர்களின் இல்லத்திற் கேகி உணவருந்தித் தங்கினோம்.

மாலை 6-00 மணியளவில் உடற்தூய்மை செய்து கொண்டு திருக்கோயிலுக்குச் சென்றோம். உலகெலாம், படைத்தும், ,காத்தும், கரந்தும் விளையாடும் தேவி வசந்த மண்டபத்தில் அழகுக்கொருவரும் ஒவ்வாத வல்லியாக மலரணையில், புவனங்களையெல்லாம் தன்னடிப்படுத்தும் "புவனேஸ்வரியாக" கொலுவீற்றிருந்த கவினுறு காட்சி எழுத்தினுள் அடக்கவொண்ணாது. செம்மாந்திருந்த சேயிழையாயின் எழில் வெள்ளத்தைப் பருக "நாலாயிரங்கண் படைத்திலனே, அந்த நான்முகனே" என்ற அருணகிரியாரின் தெய்வீக வாக்குத்தான் எங்கள் நினைவினுள் கனன்றது. ஸ்ரீ சங்கர பூஜை ஆரம்பமாயிற்று. பூஜையின் முதலிருந்து முடிவடையும் வரை அங்கு ஆலயத்தின் பிரதமகுருக்களைக் காணமுடியவில்லை. அம்மை தான் இருந்தாள். தன்னை மறந்து இறைவியுடன் ஒன்றிணைந்த நிலையிலே திரு. குருக்கள் அவர்கள் ஆற்றிய ஆராதனை குழுமியிருந்தோரை நெக்குருகச் செய்துவிட்டது.

பின்பு அன்பர் பலரின் தூண்டுதலுக்கியையவும் திரு. குருக்கள் அவர்களின் அன்பு ஆணைக்கு உட்பட்டும் அடியேன் 'அபிராமி' என்னும் பொருள் பற்றி அவளருளையே துணையாகக் கொண்டு 15 வினாடிகள் உரையாற்றினேன். அஃது பொன்மேரு மலையை அடைந்த பொல்லாக் கருங்காக்கையும் பொன்னிறம் பெற்றாற்போல, அன்னையின் திருவருள் அடியேனையும் தனது கருணைப் பெரு வெள்ளத்துள் அழுத்தியது என்பதல்லாது வேறு எவ்விதம் எண்ணுவது.

அன்னை நாகபூஷணியின் திருவடிகளை அனுதினமும் வருடி, வருடி, அருட்செல்வத்தைத் தேக்கித் தேக்கி, அன்பர்களுக்கு அள்ளி, அள்ளி வழங்கும் திரு. குருக்கள் அவர்கள் இறுதியில், இரத்தினச்சுருக்கமாக அன்னையின் சக்தியையும் அவள் அருளை மக்கள் பெறும் வழியையும், 'மூல பண்டாரம் வழங்குகின்றான், வந்து முந்துமினே' என்று கூறி சிவநாம முழக்கம் செய்தார்கள்.

# அஷ்டவசுக்கள்

ஒரு நாள் அஷ்டவசுக்கள் தமது அன்பு மனைவிமாருடன் வசிட்ட முனிவர் வசித்து வந்த மலைச்சாரலுக்குச் சென்றார்கள். அங்கு அவர்கள் வசிட்டரின் நந்தவனம், வனங்கள், குன்றுகள் முதலியவற்றில் ஏறிக் குதித்து விளையாடினார்கள்.

அப்பொழுது வசுக்களில் ஒருவன் வசிட்ட முனிவரின் "நந்தினி" என்ற காமதேனுப் பசு அங்கு மேய்ந்து கொண்டிருப்பதைக் கண்டு விட்டான். அதன் அழகைத் தன் மனைவிக்கும், மற்றைய வசுக்கள், வசுக்களின் மனைவிமாருக்கும் சுட்டிக்காட்டினான். அதன் பெருமைகளைப் புகழ்ந்தான்.

எல்லா வசுக்களும் அவர்களின் மனைவிமாரும் வசிட்டரின் "காமதேனு" பசுவைப் பார்த்து அதன் அழகைப் புகழ்ந்தார்கள்.

அவர்களில் ஒருத்தி தன் புருஷனைப் பார்த்து எப்படியாவது இந்தப் பசுவைப் பிடித்துத் தரும்படி பிடிவாதமாகக் கெஞ்சிக் கேட்டாள்.

"தேவர்களாகிய எங்களுக்கு இந்தப் பசுவின் பால் எதற்கு? இந்தப் பசு வசிட்ட முனிவருடையது. இந்த தபோவனம் வசிட்ட முனிவருடையது. இந்தப் பாலைக் குடித்த அரசர்கள் பெரும் புண்ணியம் அடைவார்கள். நாங்கள் தேவர்கள் ஆகையால் நமக்கு இப்பசு தேவையில்லை" என்றான்.

அவனுடைய மனைவி விட்டபாடில்லை "எப்படியாவது அதைப் பிடித்துத் தாருங்கள். எனக்கு மண்ணுலகில் ஒரு பக்தை இருக்கிறாள். அவளுக்கு இப்பசுவை அன்பளிப்பாகக் கொடுக்க வேண்டும். வசிட்டர் திரும்பி வருமுன் பிடித்துத் தரவேண்டும். இதனை விட எனக்கும் பிரியமான பொருள் இந்த உலகில் கிடையாது" என்று அவள் தன் புருஷனை வருத்தினாள்.

அதனால் ஒன்றும் செய்யமுடியவில்லை மற்றைய ஏழு வசுக்களையும் சேர்த்து பசுவைப் பிடித்து கயிற்றால் கட்டி இழுத்துக் கொண்டு தேவ உலகம் சென்றுவிட்டான்.

வசிட்டர் திரும்பித் தன் தபோவனம் வந்தார். நந்தினியைக் காணவில்லை. ஞானதிருஷ்டியால் பசு எவ்வாறு காணமல் போனது என்று அறிந்தார். மிகுந்த கோபம் கொண்டு அஷ்ட வசுக்களை மனிதர்களாக மண்ணுலகில் பிறக்க வேண்டுமெனச் சபித்தார். இச்செய்தி அஷ்டவசுக்களுக்கு எட்டியது.

உடனே வசுக்கள் வசிட்டரிடம் வந்தார்கள். தமது தவறை மன்னிக்கும் படி வசிட்டரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார்கள்.

பிள்ளைகளையும் பெண்களையும் சிறுவயதிலேயே
பள்ளிக்கூடம் அனுப்ப வேண்டும்
அப்படி அனுப்பாதவர்களை தண்டிக்க வேண்டும்.

---

பேச்சை விட மௌனமே சிறந்தது பேசித்தான் தீர வேண்டும் என்றால்
அந்த பேச்சு உண்மை நேர்மையாய் இனிமையாய் இருக்கட்டும்

பொருட் செல்வத்துடன் அருட் செல்வத்தையும் தேடுங்கள்.

---

நாள்தோறும் குறைந்த பட்சம் ஒரு மணி நேரமாவது ஆச்சாரியார்களையும்
இறைவனையும் பற்றிச் சிந்தனை செய்யுங்கள் சிறிது நேரமாவது
ஆழ்வார்கள் மற்றும் ஆச்சாரியார்கள் அமுத வாக்குகளை படியுங்கள்.

---

தவறு என்று கண்டால்
தீமையற்ற சொற்களால் அஞ்சாமல் கூறு.

---

அறிவுடைய மனிதரின் இதயம் என்பது எதனாலும் களங்கம்
அடையாமல் எந்தப் பொருள்களையும் பிரதி பலிக்கும்
கண்ணாடி போன்றிருக்க வேண்டும்.

---

## பசுவின் குரல்

காருண்யம் மிக்க மனிதர்களே உங்களுக்கு வாழ்நாள்
முழுவதும் பால் தருகிறேன் என்னை கொல்லாதீர்கள்
நீங்கள் கழித்துவிடும் புல் தவிடு வைக்கோல் கழிவுநீர்
இலை குழைகளை உண்டு உங்களுக்கு சத்துள்ள பால்
தருகிறேன் என்னை கொல்லாதீர்கள்.

# இ.ச.பேரம்பலம் சகோ நிறுவனம்






## மிதிவண்டிகள்
## மிதிவண்டி உதிரிப்பாகங்கள்

மற்றும்

## உதிரிப்பாக வகைகள் இறக்குமதியாளரும் விற்பனையாளர்களும்




கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

☎ 021-222-2988

தொலைநகல் :021-222-2368


இச்சஞ்சிகை ஏழாலை ஆத்மஜோதி தியான மணிமண்டப சபை திரு.நா.முருகையா அவர்களால்
இல:351 மணிக்கூண்டு வீதி யாழ்ப்பாணம்; ஐய்ராம் பிறின்ரேஸ் ஸ்தாபனத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.